# Holiday Assignments

## Primary Section

**Tamil** | **Grade 5** | **Tamil Medium**

**01. பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்குத் தந்திருக்கின்றீர்கள். ஆனாலும் சுதந்திரமாகப் பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதில் உள்ள சுவை இதிலே கிடைத்திடுமா? முன்பு எல்லாம் சின்னஞ்சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். பரந்த வயல்வெளிகள் எமது நிறத்தைப் போலவே பசுமையாகக் காட்சியளிக்கும். கதிர் சுமந்த நெல்லினங்கள் எம்மைத் தலையசைத்து வரவேற்கும்.

1. எம்மைத் தலையசைத்து வரவேற்பன எவை என இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

   ..........................................................................................

2. விசிறியும் அழியும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

   ..........................................................................................

3. இப்பந்தியில் இடம்பெறும் ஒத்தகருத்துள்ள சொற்கள் இரண்டினை எழுதுக.

   ..........................................................................................

4. பின்பு என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக.

   ..........................................................................................

5. இப்பந்தியில் இடம்பெறும் முன்னிலைப் பன்மைச் சொல்லை எழுதுக.

   ..........................................................................................

6. இப்பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.

   ..........................................................................................

**02. எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.**

1. வீரன் - ..............................
2. குறவன் - ..............................
3. செல்வன் - ..............................
4. மருத்துவன் - ..............................
5. பாங்கன் - ..............................

**03. பின்வரும் பாடலினை வாசித்து விடை எழுதுக.**

எதற்கு?

இரவும் பகலும் எதற்கு? - மனம்
இன்பம் துன்பம் உணர!

மேடு பள்ளம் எதற்கு? - திறன்
மேன்மை தாழ்மை உணர!

காயும் கனியும் எதற்கு? - சொல்
கடுமை இனிமை உணர!

வெயிலும் மழையும் எதற்கு? - உள்ளக்
கடுமை அன்பு உணர!

பூவும் பிஞ்சும் எதற்கு? - நறும்
புதுமை இளமை உணர!

பிறப்பும் இறப்பும் எதற்கு? - உலகில்
ஆக்கம் அழிவு உணர!

வரவு செலவு எதற்கு? - உலகில்
நடுவு நிலைமை உணர!

மண்ணும் விண்ணும் எதற்கு? - வாழ்வின்
மறுமை இம்மை உணர!

வெ. நல்லதம்பி

**எதிர்க் கருத்துச் சொற்களை எழுதுக.**

1. இரவு — பகல்
2. ..........
3. ..........
4. ..........
5. ..........
6. ..........
7. ..........
8. ..........
9. ..........
10. ..........



1 ____________________________________________

2 ____________________________________________

3 ____________________________________________

4 ____________________________________________

5 ____________________________________________